# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம்** 22-12-2023 **வெள்ளிக்கிழமை காலை** 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

.

நகர்மன்ற தலைவர் திரு.பொன்.ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகரானது 1913-ம் ஆண்டு முதல் நகராட்சியாக செயல்பட்டு வருகின்றது. குழித்துறை நகராட்சியானது நூற்றாண்டு விழா கண்டு 110 வது ஆண்டை கடந்து சென்று கொண்டு உள்ளது.

குழித்துறை நகராட்சி 21 வார்டுகளை கொண்டும் மக்கள் தொகை 21307(2011) இதன் பரப்பளவு 5.15 ச.கி கொண்டுள்ளது. குழித்துறை நகராட்சிகளின் இருபுறமும் எல்லைப்புற உள்ளாட்சிகளாக நல்லூர் மற்றும் உண்ணாமலைக்கடை பேரூராட்சிகள் அமைந்துள்ளன. மார்த்தாண்டம் நகரபகுதிகளில் ஒரு தெருவின் ஒரு பகுதி நகராட்சியாகவும் ஒரு பகுதி பேரூராட்சியாகவும் எல்லைகள் அமைந்துள்ளது. இதனால் அப்பகுதிகளில் குடிநீர் வினியோகம், தெருவிளக்கு மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதில் நடைமுறை சிரமங்கள் அதிகம் ஏற்படுகிறது. மேலும் பேரூராட்சி பகுதியில் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் திடக்கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டிவிடுகின்றனர். இதனால் பொது சுகாதாரம் சீர்கெடுகிறது. மேலும் நல்லூர் பேரூராட்சி, உண்ணாமலைக்கடை பேரூராட்சி, பொதுமக்கள் பேருந்துநிலையம், தினசரி காய்கறிசந்தை, மீன்சந்தை, மருத்துவமனை, நீதிமன்றம், காவல் நிலையம், வட்டாசியர் அலுவலகம் மற்றும் அனைத்து தேவைகளுக்கும் மார்த்தாண்டம் நகரத்திற்கு வர வேண்டிய கட்டாயம் உள்ளது.

எனவே எதிர்கால தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்தவும் எல்லை பிரச்சனை இல்லாமல் பொது மக்களுக்கு அடிப்படை தேவைகள் நிறைவேற்றவும் சிறந்த முறையில் பொது மக்களுக்கு சேவை வழங்கவும் நல்லூர் பேரூராட்சி மற்றும் உண்ணாமலைகடை பேரூராட்சி பகுதி இரண்டையும் குழித்துறை நகராட்சியுடன் இணைந்து பெருநகராட்சியாக தரம் உயர்த்தி தர தமிழக அரசை குழித்துறை நகர்மன்றம் அன்புடன் கேட்டுகொள்கிறது.

மன்றத்தீர்மான எண்.719 (1) நல்லூர், விளவங்கோடு ஊராட்சிகள் உண்ணாமலைக்கடை, களியக்காவிளை மற்றும் பாகோடு பேரூராட்சிகள் ஆகியவை குழித்துறை நகராட்சியுடன் இணைக்க தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

2) கொடுங்குளம் சாலையில் கொல்லகுளம் பகுதியில் இருந்து உண்ணாமலைக்கடை பேரூராட்சி எல்கை வரை சாலை செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.719 (2) தீர்மானிக்கப்பட்டது.

<u>நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்</u>

1) கல்லுக்கெட்டியில் இருந்து தீப்பாஞ்சான் தேவி கோவில் வரை உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளது. எனவே அதனை சீர் செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.720 தீர்மானிக்கப்பட்டது.

<u>9–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் எம்.பி. ரவி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) விளவங்கோடு சாலையில் மார் இவானியஸ் பள்ளி அருகாமையில் இருந்து திரு.தாமஸ் அவர்கள் வீடு அருகாமை வரை வடிகால் தூர்வாரி தாழ்ந்த பகுதியை உயரப்படுத்தி தண்ணீர் முழுவதும் வடிகாலில் செல்ல வழி வகை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.721 தீர்மானிக்கப்பட்டது.

<u>11-வது வார்டு கவுன்சிலர் திருமதி.ஜெ.கெ.றோஸ்லெட் அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) தாணிக்காவிளை முதல் லெட்சி அம்மன் கோவில் வரை உள்ள ஓடைகள் மிகவும் பழுதடைந்து உள்ளது. அதனை உடனடியாக சரி செய்யும்படியும், அந்த பகுதி வயலின் சுவர் உடைந்துள்ளது. அதனையும் சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.722 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) சாலியன்விளை சாலையின் ஓடையில் உள்ள சிலாப் உடைந்து மிகவும் ஆபத்தாக உள்ளது. அதனை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.723 தீர்மானிக்கப்பட்டது.

14-வது வார்டு உறுப்பினர் திருமதி அ. லில்லி புஷ்பம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) 14-ம் வார்டில் வாத்தியாகுடியில் இருந்து சீரான் விளை வரை உள்ள ரோடு மோசமாக உள்ளது. அதனை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.724 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) கொடுங்குளத்தில் பழைய கவுன்சிலர் வீட்டுக்கு செல்லும் ரோடும் சரியில்லாமல் இருக்கிறது. அதனை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.724 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) காமானாட்டு விளையில் திரு. ரீகன் வீட்டுக்கு செல்லும் பாதை மிகவும் மோசமாக உள்ளது. அதனை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.724 (3) தீர்மானிக்கப்பட்டது.

15-வது வார்டு கவுன்சிலர் திரு.பா. ரீகன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) 15-வது வார்டுக்குட்பட்ட டி5/258-ல் அமைந்துள்ள வீடுகளில் மழை காலங்களில் பல்வேறு பகுதியிலுள்ள மழைநீர் அட்டைகுளம் மைதானம் வழியாக இப்பகுதி வீடுகளில் புகுந்து பல்வேறு சேதங்களையும் வீடுகள் இடியும் அளவுக்கு தண்ணீர் புகுவதை தடுக்கும் விதமாக ஓடை அமைத்து மாற்று வழியில் தண்ணீர் விட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.725 தீர்மானிக்கப்பட்டது.

2) அட்டைகுளம் குளத்திப்பாறை இசக்கி அம்மன் திருக்கோவில் முன்பாக உள்ள மழைநீர் ஓடையில் மழை காலங்களில் தண்ணீர் ஓடையின் மேல் வழியாக சாலையில் வழிந்து ஓடுவதும், ஓடைக்குள் கழிவு பொருட்களை மக்கள் எறிந்து செல்வதை தடுக்கும் விதத்தில் ஓடையின் மேல் பகுதியை மூடி அமைக்க, மூடி அமைக்க முடியாத பகுதியில்

தடுப்பு சுவரோ வலையினாலோ மூட அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.726 தீர்மானிக்கப்பட்டது.

16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்

1) கொடுங்குளம் சாலை கருந்தளம் அமைக்கப்பட்ட பிறகு சாலை இருபக்கமும் சாலையை பாதுகாக்கும் விதமாகவும் பொதுமக்கள் நலன் கருதியும் பேவர் பிளாக் அல்லது காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.727 தீர்மானிக்கப்பட்டது.

20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.M. சர்தார் ஷா கொண்டு வரும் தீர்மானங்கள்

1) மார்த்தாண்டம் சாங்கோ மெடிக்கல்ஸ் அருகிலிருந்து ஆர்.சி.சர்ச் பின்புறம் வரை அலங்காரகற்கள் சாலை சேதமடைந்துள்ளதால் புதிதாக சாலை செப்பனிட்டு அலங்காரகற்கள் பதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.728 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) மாதவவிலாசம் பள்ளிக்கூடத்தின் இடது பக்கம் ஆட்டோ ஸ்டாண்ட் முதல் A.K.N. பின்பும் வரையிலும், மாதவவிலாசம் பள்ளிக்கூடத்தின் வலது பக்கம் ராணி ஸ்டோர் முதல் ஆர்.சி.தெரு சேட்டின் வீட்டின் முன்பகுதி வரையிலும் மற்றும் பள்ளிகூடத்தின் பின் பகுதியிலும் அலங்காரகற்கள் பெயர்ந்து சாலை பழுதடைந்துள்ளதால், சாலையை சீர் செய்து புதிய அலங்காரகற்கள் பதிந்து செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.728 (2) தீர்மானிக்கப்பட்டது

3) மார்த்தாண்டம் டெம்போ ஸ்டான்ட் அருகிலிருந்து ஆர்.சி.சர்ச் வரையிலும், லட்சுமி திருமண மண்டபம் அருகிலிருந்து நந்தன்காடு சாலை வரை புதிய அலங்காரகற்கள் பதித்து சாலையை செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.728 (3) தீர்மானிக்கப்பட்டது

4) மார்த்தாண்டம் டெம்போஸ்டான்ட் அருகில் அமைந்துள்ள மழலைகளுக்கான அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் புதிதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டித்தரவும் அஜண்டா வைத்து மன்றம் நிறைவேற்றி தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.728 (4) தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 21 வரையுள்ள 1718 தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு தனியார் ஒப்பந்ததாரர் கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பணி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அவர்களுடைய ஒப்பந்தகாலம் 6-12-2023-ல் முடிவடைகிறது. தற்போது குழித்துறை நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் LED விளக்குகளாக மாற்ற Super electricals நிறுவனம் மூலம் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிக்க இன்னும் இரண்டு மாதங்கள் தேவைப்படுகிறது. எனவே மேலும் இரண்டு மாதத்திற்கு (ஜனவரி மற்றும் பிப்ரவரி 2024) தனியார் நிறுவனம் கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் மூலம் ஒப்பந்த விலை விகிதத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1140/2020/இ1.

மன்றத்தீர்மான எண்.729 தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சியில் தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக வார்டு எண் 4 -ல் வள்ளிகோடு முதல் அம்பலத்துவிளை 3 சாலை (Unicode:149004R013) மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சாலையை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.2978/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.730 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சி வார்டு எண் 7-ல் இடைதெரு பின்பக்கம் கோர்ட் முதல் பெருந்தெரு மீன்மார்க்கெட் சாலையில் (Unicode:14900R035) உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து கழிவுநீர் சாலையில் வழிந்தோடுகிறது. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. தற்பொழுது மேற்கண்ட சாலை TURIP 2022-2023 திட்டத்தின் கீழ் சாலை அமைக்க வேண்டியுள்ளதால் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.75,000/- (ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3170/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.731 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட KNMT-2023.2024 திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகனமேடை அமைக்க இடையூறான நிலையில் நிற்கும் 13 தேக்கு மரம் மற்றும் 2 பூவணை மரத்தினை 16/11/2023 அன்று பொது ஏலம் விடப்பட்டத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்து கொண்டனர். அதன் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஏலத்தாரர் பெயர் | ஏலக்கேள்வி | அரசாங்க மதிப்பு |
|---|---|---|---|
| | | தேக்கு மரம் | |
| 1 | திரு.D. ஜஸ்டின்குமார் | ரூ. 1,79,000/- | 1,78,000 |
| 2 | திரு.ஆல்பர்ட் ராஜ் | ரூ. 1,79,500/- | |
| | | பூவணை மரம் | |

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.D. ஜஸ்டின்குமார் | ரூ. 1200/- | 1000/- |
| 2 | திரு.ஆல்பர்ட் ராஜ் | ரூ. 1300/- | |

வரப்பெற்ற இரண்டு ஏலக்கேள்விகளில் உச்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.ஆல்பர்ட் ராஜ் என்பவரின் ஏலக்கேள்வியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.-நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.911/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.732 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண் 20-ல் பம்மம் இடத்தில் தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அருகில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து கழிவுநீர் சாலையில் சென்று பொதுமக்களுக்கும் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகாலை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.80,000/- (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அ.கு.-</u> பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3171/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.733 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண் 14-ல் காமனாட்டுவிளை சாலை (Unicode:149014L059) தற்பொழுது பெய்து வரும் மழைகாரணமாக சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் இடையூறாக உள்ளது எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட சாலையை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.5,70,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.3172/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.734 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண் 20-ல் லாரிபேட்டையில் SBM 2.0 2022-2023 திட்டத்தின் கீழ் பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது மேற்கண்ட கழிப்பிடத்திற்கு சுற்றுசுவர் இல்லாத காரணத்தினால் பாதுகாப்பின்றி உள்ளது, எனவே பொதுசுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலன்கருதி மேற்கண்ட இடத்தில் சுற்றுசுவர் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3173/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.735 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சியில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டம் 25/08/2023 அன்று துவங்கப்பட்டு துவக்க விழாவில் விழா நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்யவும் LED TV பொருத்தவும் மற்றும் போட்டோ எடுக்கவும் நகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது அதன் அடிப்படையில் மேற்கண்ட பணி மேற்கொள்ள மூன்று நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டது உத்தேச மதிப்பீடு ரூ.10,500/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஆல்பர்ட்ராஜ் மூலம் பணி ஒப்படைப்பு முறையில் பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 3174/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.736 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண் 1-ல் நாகர்கோவில் திருவனந்தபுரம் NH சாலையில் தெற்குபக்கம் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து மழைநீர் மற்றும் கழிவுநீர் சாலையில் வடிந்து பொதுமக்களுக்கு சுகாதார கேடு மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட மழைநீர் வடிகால் சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.** 3175/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.737 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள், டோனர் (Toner), படிவங்கள் மற்றும் பதிவேடுகள் போன்ற பொருட்களை Kanya Industrial Co-operative Printing Press, Tamil Nadu Multipurpose INDCO Service and Thuckalay Co-operative printing press அச்சகம் மூலம் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம்) நகராட்சி பொது நிதியின் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> 1) மன்றம் முடிவு செய்யலாம்.

2) மேற்கண்ட செலவு வருவாய் மூலதன நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**180/2007/டி2.

மன்றத்தீர்மான எண்.738 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கழிப்பிடங்களுக்கான Flex மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு புக் பைண்டிங, கலர் ஜெராக்ஸ் செய்த வகைக்கு பில் தொகை ரூ.4,225/-யினை துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- அத்தியாவசிய பணிகளுக்கு செலவுகள் மேற்கொண்டுள்ளதால் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு செலவின தொகை வழங்கலாம்.
ந.க.எண்.3256/2022/H1

மன்றத்தீர்மான எண்.739 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75AL.6196 Scorpio வாகனத்தில் உள்ள இஞ்சின் ஆயில் மற்றும் இதர பழுதுகள் சரி செய்வதற்கு டெரிக் மோட்டார்ஸ் நிறுவனத்திடம் விலைப்புள்ளி ரூ.55,860/- பெறப்பட்டுள்ளது. மேற்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டெரிக் மோட்டார்ஸ் பிறைவேட் லிமிடெட் நாகர்கோவில் நிறுவனம் மூலம் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்திட ரூ.55,860/- ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.113/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.740 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் TN.75J.8227-க்கு 2023-2024-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய 31-10-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | Akshaya Motors | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | Ganes Motors Works | 1.80% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலில் வரிசை எண்.1-ல் கண்ட Akshaya Motors நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ளார். குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2778/2012/இ1.

மன்றத்தீர்மான எண்.741 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டதின் குப்பைகள் சேகரிக்கப்பட்டு அதனை மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு மக்காத குப்பைகள் மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகளை திண்டுக்கல் மாவட்டம் கரிக்காலி செட்டிநாடு சிமெண்ட் ஆலைக்கு இந்நகராட்சி மினிலாரி மூலம் அனுப்பப்பட்டு வந்தது. அதன் தூரம் சுமார் 400 கி.மீ. ஆகும். மேலும் அதற்கு இரண்டு நாள் ஆகிறது. அதனால் தினசரி நடைபெறும் சுகாதாரப்பணி பாதிக்கப்படுகிறது. சிமெண்ட் ஆலைக்கு கொண்டு செல்ல வாடகை லாரி மூலம் அனுப்ப ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3095/2023/H1.

மன்றத்தீர்மான எண்.742 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சி இடைவிளாகத்தில் Mide Office அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் பயன்பாட்டிற்கு கழிப்பிட வசதி இல்லாத காரணத்தால் கழிப்பிட வசதி செய்துதர மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்கண்ட அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பிடம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2,50,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3177/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.743 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் பன்னியானி சாலையில் சிறுபாலம் சீரமைக்கும் பணிக்கு ரூ.03.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.580, நாள் 31-07-2023-ன்படி மன்றம் அனுமதி பெறப்பட்டு 08-12-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திருமதி.பி. சரோஜா | 0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி. பியூலின் நிமி | 1.89% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.11% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2079/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.744 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் அட்டக்குளம் மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.581, நாள் 31-07-2023-ன்படி மன்றம் ஒப்புதல் பெறப்பட்டு 08-12-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திருமதி.பி. சரோஜா | 2.37% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி. பியூலின் நிமி | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 0.06%

மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2019/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.745 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.18

குழித்துறை நகராட்சி வார்டு எண்.11-ல் கண்ணக்கோடு செங்கோட்டுவிளை பாதையை கான்கிரீட் பாதையாக அமைக்க ரூ.4.70 இலட்சம் மதிப்பீடு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.605, நாள் 28-08-2023 அன்று மன்ற ஒப்புதல் பெற்று 08-12-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு. கிறிஸ்துராஜ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ். பாபு | 1.09% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2065/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.746 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சி கீழ்பம்மம் உரக்கிடங்கில் 15-வது நிதி குழு 2020-2021-ம் திட்டத்தின்கீழ் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் நுண்ணியிர் உரக்கிடங்கு (MCC) கட்டப்பட்டு முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டில் குப்பை அரைக்கும் இயந்திரம் அமைக்க வழிவகை செய்யப்படாத காரணத்தினால் ஏற்கனவே கருங்கல் சாலையில் உள்ள MCC-யில் பயன்பாட்டில் உள்ள குப்பை அறைக்கும் இயந்திரத்தினை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட குப்பை அரைக்கும் இயந்திரத்தை மாற்றி

அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.75,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஜெயசிங் மூலம் பணி ஒப்படைப்பு முறையில் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3179/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.747 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.20

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையுள்ள வார்டுகளில் கீழ்காணும் விவரப்படி காலிமனைவரி விதிப்புகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள விவரப்படி சொத்துவரி விதிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரே வரிவிதிப்புதாரருக்கு ஒரே இடத்திற்கு காலிமனை வரிவிதிப்பும் சொத்துவரிவிதிப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட காலிமனை வரிவிதிப்பில் சொத்துவரி ஏற்படுத்தும்போது காலிமனைவரியினை ரத்து செய்யப்படாமல் உள்ளது. எனவே தற்போது கீழ்காணும் விவரப்படி காலிமனை வரிவிதிப்புகளை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பெயர் | ரத்து செய்யப்பட வேண்டிய காலிமனை வரிவிதிப்பு எண் | அதே இடத்தில் உள்ள சொத்துவரி விதிப்பு எண் | ரத்து செய்யப்பட வேண்டிய வருடம் | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1 | சுஜாதா | 149/010/900439 | 149/010/900067 | 2012 – 2013 I to 2023 – 2024 II | 9744 |
| 2 | நடராஜன் | 149/010/900495 | 149/010/900176 | 2018 – 2019 to 2023 – 2024 II | 7335 |
| 3 | தம்பான் மற்றும் சுப்புலெட்சுமி | 149/010/900513 | 149/010/900320 | 2013 – 2014 I 2020 – 2024 II | 1344 |
| 4 | சுசீலா | 149/010/900725 | 149/010/900052 | 2013 – 2014 II to 2023 – 2024 II | 6025 |
| 5 | ஜெகநாதன் | 149/010/900729 | 149/010/900041 | 2015 – 2016 II to 2023 – 2024 II | 13860 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | அஸ்வின் தாமஸ் | 149/010/900538 | 149/010/900234 | 2020 – 2021 to 2023 – 2024 II | 7335 |
| 7 | அஸ்வின் தாமஸ் | 149/010/900534 | 149/010/900234 | 2023 – 2024 II | 1344 |
| 8 | இன்பராஜ் பிறீடா | 149/011/900546 | 149/011/900033 | 2013 – 2014 I to 2023 - 2024 | 44902 |
| 9 | ற்றி. ஜெகன் | 149/011/900486 | 149/011/900572 | 2022 – 2023 I to 2023 – 2024 II | 1296 |
| 10 | குளோறி பாய் | 149/012/900739 | 149/012/900020 | 2012 – 2013 II to 2023 – 2024 II | 7776 |
| 11 | ற்றி. மகேஸ்வரி | 149/012/900236 | 149/010/900026 | 2019 – 2020 I to 2023 – 2024 II | 2016 |
| 12 | ஜோஸ் ஜான்சன் | 149/012/900241 | 149/012/900516 | 2020 – 2021 – II | 284 |
| 13 | எஸ். செல்வராஜ் | 149/013/900243 | 149/013/900245 | 2017 – 2018 II to 2023 – 2024 II | 561 |
| 14 | எஸ். செல்வராஜ் | 149/013/900244 | 149/013/900245 | 2019 – 2020 II to 2023 – 2024 | 2016 |
| 15 | ஷைனி | 149/017/900289 | 149/017/900481 | 2012 – 2013 to 2023 – 204 | 2196 |
| 16 | சௌமியா | 149/017/900709 | 149/017/900885 | 2022 – 2023 I, II | 1532 |
| 17 | கனகராஜ் | 149/017/900854 | 149/017/900676 | 2019 – 2020 II to 2020 – 2021 II | 3453 |
| 18 | முத்துசாமி | 149/017/900765 | 149/017/900890 | 2022 – 2023 I, II | 1656 |
| 19 | றசல்ராஜ் மற்றும் மரிய செல்வி | 149/018/900385 | 149/018/900019 | 2013 – 2014 II to 2023 – 2024 II | 1775 |
| 20 | ற்றி. ராஜன் | 149/018/900387 | 149/018/900403 | 2021 – 2022 II | 501 |
| 21 | ஆர். ஜெயராஜ் | 149/018/900396 | 149/018/900172 | 2021 – 2022 I, II | 2322 |
| 22 | ஜே. லோகிதாஸ் | 149/018/900415 | 149/018/900271 | 2022 – 2023 I to 2023 – 2024 II | 9522 |
| 23 | மனோகரகுமார் | 149/009/900228 | 149/009/900506 149/009/900507 | 2023 – 24 | 2192 |
| 24 | சந்தோஷ்குமார் | 149/009/900231 | 149/009/900503 | 2023 – 24 | 1104 |
| 25 | உமேஷ் சேகர் எஸ். மகேஷ் சேகர் | 149/009/900464 | 149/009/900484 | 201 7 – 2018 to 2023 – 2024 | 5382 |
| 26 | சுஜிதா .ம | 149/009/900481 | 149/009/900492 | 2023 – 24 | 764 |
| 27 | வினிதா | 149/009/900491 | 149/009/9004968 | 2020 – 21 | 212 |
| 28 | ஐ. ஜேக்கப் ஜஸ்டின் | 149/009/900232 | 149/009/900499 149/009/900425 | 2023 – 24 | 4260 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | பி. ரெகு | 149/009/900459 | 149/009/900495 | 2014 – 2015 to 2023 – 24 | 8040 |
| 30 | எஸ். சந்தனகுமார் | 149/009/900461 | 149/009/900485 | 2014 – 2015 to 2023- 2024 | 8952 |
| 31 | எம். பிரதீபா | 149/001/900384 | 149/001/900072 | 2013 – 2014 to 2023- 2024 | 6000 |
| 32 | சி. பிபின் | 149/001/900385 | 149/001/900081 | 2016 – 17 to 2023- 24 | 3760 |
| 33 | சுஜீ .ஆர் | 149/001/900410 | பேரூராட்சிக்குட் பட்ட பகுதியில் உள்ள இடம் | 2021 – 22 to 2023- 24 | 6900 |
| 34 | பாக்கியதாஸ் ஒய்.ஆர். | 149/001/900407 | 149/001/900096 | 2020 – 21 to 2023- 24 | 3324 |
| 35 | டி.எம். ஷீலா பிரியதர்சினி | 149/001/900456 | 149/001/900103 | 2017 – 18 to 2023- 24 | 43164 |
| 36 | ஜே. ஷீலா | 149/001/900393 | 149/001/900457 | 2023- 24 | 6474 |
| 37 | பி. ஜெயராஜ் | 149/002/900500 | 149/002/900156 | 2013 – 2014 to 2023- 2024 | 9300 |
| 38 | சி. மணிகண்டன் | 149/002/900231 | 149/002/900002 | 2019 – 2020 to 2023- 2024 | 4886 |
| 39 | ஜி.என். கனகராஜ் | 149/003/900281 | 149/002/900002 | 2012 – 2013 to 2023- 2024 | 19500 |
| 40 | என். வசந்தி | 149/003/900285 | 149/003/900053 | 2012 – 2013 to 2023- 2024 | 5068 |
| 41 | எம். ஜாண்சன் | 149/003/900324 | 149/003/900057 | 2017 – 2018 to 2023- 2024 | 7939 |
| 42 | ஆர். ஜெயசேகர் | 149/003/900332 | 149/003/900194 | 2019 – 2020 to 2020- 2021 | 636 |
| 43 | ராம்குமார் | 149/003/900278 | 149/003/900078 | 2012 – 2013 to 2023- 2024 | 21660 |
| 44 | ஜனேசி | 149/003/900329 | 149/003/900087 | 2012 – 2013 to 2023- 2024 | 15092 |
| 45 | சி. ஜாண் ஜஸ்டின் | 149/004/900263 | 149/004/900033 | 2012 – 2013 to 2023- 2024 | 3362 |
| 46 | ஆர். ஜஸ்டின்குமார் | 149/004/900425 | 149/004/900038 | 2014 – 2015 to 2023- 2024 | 2688 |
| 47 | ஜிஞ்சு ஷாபிகா | 149/004/900452 | 149/004/900048 | 2015 – 2016 to 2023- 2024 | 2112 |
| 48 | ற்றி. விஜயராஜ் | 149/004/900559 | 149/004/900053 | 2012 – 2013 | 14256 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | to 2023- 2024 | |
| 49 | மார்க்கிரட் ஹெலன்மணி | 149/004/900422 | 149/004/900063 | 2012 – 2013 to 2023- 2024 | 8064 |
| 50 | நியூ இந்தியா தேவ சபை | 149/004/900620 | 149/004/900630 | 2017 – 2018 to 2023- 2024 | 1628 |
| 51 | புஷ்பராணி | 149/005/900373 | 149/005/900129 | 2012 – 2013 to 2023- 2024 | 1984 |
| 52 | ற்றி. அருள் சின்னப்பா | 149/005/900377 | 149/005/900191 | 2012 – 2013 to 2023- 2024 | 15015 |
| 53 | எ. தேவசாகயம் | 149/005/900401 | 149/005/900402 | 2019 – 2020 to 2023- 2024 | 1680 |
| 54 | டி. சிவபிராசத் | 149/006/900118 | 149/006/900199 | 2012 – 2013 to 2023- 2024 | 6615 |
| 55 | எம். ராஜம் | 149/006/900387 | 149/006/900234 | 2018 – 2019 to 2023- 2024 | 5760 |
| 56 | எஸ். ராஜாகுமாரி | 149/006/900314 | 149/006/900286 | 2016 – 2017 to 2023- 2024 | 1000 |
| 57 | செய்த்தான் ராஜ் புரோகித் | 149/016/900660 | 149/016/900915 | 2016 – 2017 to 2023- 2024 | 7940 |
| 58 | எ.சி. முருகன் | 149/016/900763 | 149/016/900757 | 2016 – 2017 to 2023- 2024 | 4320 |
| 59 | சாந்தா | 149/016/900764 | 149/016/900729 | 2016 – 2017 to 2023- 2024 | 4218 |
| 60 | பெனின்லால் | 149/016/901019 | 149/016/900838 | 2023- 2024 | 3501 |
| 61 | சி. கோபால கிருஷ்ணன் | 149/019/901547 | 149/019/901109 | 2015 – 2016 to 2023- 2024 | 4011 |
| 62 | ற்றி. ராமேஷ் குமார் | 149/019/900482 | 149/019/901252 | 2022– 2023 to 2023- 2024 | 6328 |
| 63 | ற்றி. ராமேஷ் குமார் | 149/019/901061 | 149/019/901253 | 2021 – 2022 to 2023- 2024 | 7910 |
| 64 | ஜெனிதா சிங் ரோஸ்மி ஆல்பர்ட் | 149/019/901047 | 149/019/900344 | 2021 – 2022 to 2023- 2024 | 9590 |
| 65 | சி. தனராஜ் | 149/020/900694 | 149/020/900765 | 2015– 2016 to 2023- 2024 | 36894 |
| 66 | மேரிஜீலி ஆன்றனி | 149/020/900092 | 149/020/900015 | 2016– 2017 to 2023- 2024 | 5472 |
| 67 | தேவதாஸ் | 149/021/900155 | 149/021/900035 | 2012 – 2013 to 2023- 2024 | 1036 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 68 | சஜி | 149/021/900620 | 149/021/900137 | 2012 – 2013 to 2023- 2024 | 858 |
| 69 | ஜே. ராஜ் | 149/021/900631 | 149/021/900251 | 2012 – 2013 to 2023- 2024 | 10120 |
| 70 | தேவதாஸ் | 149/021/900639 | 149/021/900295 | 2012 – 2013 to 2023- 2024 | 7560 |
| | மொத்தம் | | | | 497070 |

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.1715/2023/அ1.

மன்றத்தீர்மான எண்.748 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.21

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் தினந்தோறும் சீரான குடிநீர் வினியோகம் செய்ய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் IUDM 2018-2019-ன்கீழ் ரூ.30.94 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு 11 மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் வினியோகம் சுகாதார பிரிவு பணியாளர்கள் மூலம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது தூய்மை பணிக்கு சுகாதார பணியாளர்கள் தேவைபடுவதாலும் தினசரி குடிநீர் சீராக வினியோகம் செய்யவும் மற்றும் 11 மேல்நிலை தொட்டிகளுக்கு தூய்மை பணி மேற்கொள்ளவும் 8 எண்ணிக்கை பணியாட்கள் (Mazdoor Grade II) தேவைப்படுகிறது. குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் வினியோகம் மற்றும் OHT-யில் பணி ஆகியவை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு உத்தேச செலவினம் ரூ.19,00,000/- (ரூபாய் பத்தொன்பது இலட்சம்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3180/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.749 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.22

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக வாங்கப்பட்டுள்ள Scorpio வாகனத்திற்கு Derik Motors திருநெல்வேலி அவர்களால் Extra Fitting போடப்பட்டு கூடுதலாக ரூ.12,000/- மற்றும் சாலை வரி Online-ல் செலுத்த சேவைகட்டணம் ரூ.4700/- Board மற்றும் Sticker கட்டணம் ரூ.3,250/- Cable வாங்கியது ரூ.2,630/- ஆக மொத்தம் ரூ.22,580/- இந்நகராட்சி ஒட்டுநர் த. சுந்தர்சிங் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.113/2019/இ1

மன்றத்தீர்மான எண்.750 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.